# රාජ්‍ය මුදල් දෙපාර්තමේන්තුව
# அரச நிதித் திணைக்களம்

DEPARTMENT OF PUBLIC FINANCE

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General — Tel. 94-11-2484614, Fax. 94-11-2436337

කාර්යාලය / அலுவலகம் / Office — Tel. 94-11-2484637, Fax. 94-11-2431458

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය, කොළඹ-01, ශ්‍රී ලංකාව.

பொதுத் திறைசேரி, நிதி திட்டமிடல் அமைச்சு, கொழும்பு-01, இலங்கை.

General Treasury, Ministry of Finance and Planning, Colombo-01, Sri Lanka.

Website: www.pfd.gov.lk

E-mail: pubfin@pfd.treasury.gov.lk


මගේ අංකය / எனது இ } PFD/PMD/03/41

ඔබේ අංකය / உமது இல / Your No }

දිනය / திகதி / Date } 2013.01.02

அரச நிதிச்சுற்றறிக்கை இல: 01/2013

அமைச்சுகளின் செயலாளர்கள்

மாகாணங்களின் பிரதான செயலாளர்கள்

திணைக்களங்களின் தலைவர்களும் மாவட்டச் செயலாளர்களும்

மாகாண சபைகளின் தலைவர்கள்

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள்

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள்,
அரசாங்க உடைமையாக்கப்பட்ட கம்பனிகள் மற்றும்
அதிகார சபைகளின் தவிசாளர்கள் அனைவருக்கும்

**<u>உள்நாட்டு நிதியங்களின் கீழ் வழங்கல் ஒப்பந்தங்களில் பங்குபற்றும் உள்நாட்டுக் கேள்வியாளர்களுக்கு கொடை முனைவு செய்யப்படும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு முன்னுரிமை வழங்குதல்</u>**

மேற்போந்த விடயம் தொடர்பில் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல்களின் 7.9.6 இன் கீழுள்ள பின்வரும் ஏற்பாடுகளுக்கு தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது. இந்த ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்விமதிப்பீட்டு நடைமுறையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பின்வரும் விதத்தில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

1) உலக வங்கியினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் நிதியளிக்கப்படும் ஒப்பந்தங்களுக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு 15%

2. இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படும் ஒப்பந்தங்களுக்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு 20%

பொருளாதார அபிவிருத்தி நடைமுறையில் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் குறிக்கோளுடன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு முன்னுரிமை எல்லை வழங்குதல் தேவைப்படுத்தப்படுகின்றது. இதற்கமைவாக சாத்தியமான விடத்து உள்நாட்டு மூலப்பொருட்களையும் தொழிலாளர்களையும் பிற காரணிகளையும் பயன்படுத்தி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு அரசாங்க நிறுவனங்களினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

3. நன்கொடையளிப்போர் முகவர் நிலையங்களின் உடன்படிக்கைகளில் ஏற்கனவேயுள்ள எந்தச் சட்டத்திலும் ஒழுங்குவிதியிலும் சுற்றறிக்கையிலும் அல்லது வழிகாட்டல்களிலும் நிபந்தனைகளிலும் பிற விதத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் என்பது 50% இலங்கையர்களைக் கொண்டுள்ள இலங்கையராகிய உரிமையாளரினால் முழுமையான உடைமையுடன் அல்லது பங்குடைமைகளுடனும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் தொழிற்சாலையிலுள்ள விலை மற்றும் 30 சதவீத அல்லது அதற்குக் கூடுதலான உள்நாட்டு உற்பத்திப் பொருட்களும் (மருந்துப் பொருட்கள் நீங்கலாக).

ஒப்பம்: பீ.பி. ஜயசுந்தர
திறைசேரிச் செயலாளர்